Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO.272/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.06 , , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தங்கமணி | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. முனிசாமி | தொழில் | கூலி |
| கிராமம் | பெரிய மூக்கனூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 32 |
| எதிரி ஆஜர் | | | 2-5, 7,8,12-15 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 6, 9-11 |
| எதிரி இறந்துவிட்டார் | | | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 14th day of July 2026.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.6 திரு. தங்கமணி முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 2019ம் வருடம் தேதி மாதம் வருடம் நியாபகம் இல்லை. ஒருநாள் காலை நேரம் வீடு இடித்த இடத்தில் நானும் அன்பரசு என்பவரும் இருந்தபோது, போலீசார் அங்கு நடந்த ஒரு வீடு இடிப்பு வழக்கு சம்பந்தமாக பார்வையிட வந்திருப்பதாகவும், அதற்கு என்னை சாட்சியாக இருக்ககும்படி கேட்டுக்கொணடு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1–வது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த பார்வை மகசர் என்னால் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1–வது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் மட்டும் என்னால் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலீசார் என்

முன்னிலையில் பொருட்கள் ஏதும் கைப்பற்றவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரர் புகார் அளித்த பின்பு அங்கு விசாரிக்க வந்த போலீசர் புகார்தாரர் மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார் என்றாலும், அப்போது தான் என்னிடமும் கையொப்பம் பெற்றார் என்றால் சரிதான். போலீசார் அங்கு வந்து சென்றததிற்கா சாட்சி கையொப்பம் கேட்டார்கள் என்றால் சரிதான். அந்த தாளில் நான் மட்டும் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அன்பரசு ம் கையொப்பம் செய்தார். அந்த இரண்டு தாள்கழிலும் 1ம் கையொப்பம் என்னுடையது தான்.

**/உண்மை நகல்//**

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 01**
**திருப்பத்தூர்.**

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 272/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.05 , Page.No. 28/25

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கவியரசு | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. தனபால் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | மூக்கனுர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 42 |
| எதிரி ஆஜர் | | | 2-5, 7,8,12-15 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 6, 9-11 |
| எதிரி இறந்துவிட்டார் | | | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 14th day of July 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ.சா.5 திரு. கவியரசு முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் தந்தை. அ.சா.2 என் இளைய சகோதரர். இவ்வழக்கு எதிரிகள் அனைவரும் தெரியும். அவர்கள் என் ஊர்க்காரர்கள். கடந்த 22.08.2019 அன்று என் தம்பி கலையரசு திருமணம் சம்மந்தமாக நானும் என் பெற்றோரும் ஆந்திரா மாநிலம் குப்பத்திற்கு சென்றிருந்தோம். காலை சுமார் 11.30 மணியளவில் என் தம்பி கடலரசு எனக்கு போன் செய்து எங்கள் வீட்டிற்கு எதிரே எங்களது பழைய வீட்டை இவ்வழக்கு எதிரிகள் அடித்து உடைப்பதாக தகவல் சொன்னார். பின்பு என் தம்பியிடம் சண்டைக்கு போகதே என்று கூறினோம். தகவல் கிடைத்து 03.30 மணியளவில் நாங்கள் வந்து பார்த்த போது எங்கள் பழைய வீடு தரைமட்டமாக

இருந்தது. மேலும் எங்கள் வீட்டில் இருந்த பொருட்களை எடுத்து சென்று அருகில் உள்ள குட்டையில் போட்டுவிட்டார்கள். இது சம்மந்தமாக ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் என தந்தை புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

ஆந்திரா மாநிலத்திற்கு நானும் என் தந்தையும் என் தாயாரும் சென்றோம் என்றால் சரிதான். இது சம்மந்தமாக 22.08.2019 அன்று என் தந்தை புகார் அளித்தார். புகார் அளித்த மறுநாள் போலீசார் என்னை விசாரித்தனர். என்னை விசாரித்த போது தான் என் பெற்றோரையும் என் தம்பியையும் போலீசார் விசாரித்தனர் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

//**உண்மை நகல்**//

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 01**
**திருப்பத்தூர்.**